## 11வது சர்வதேச யோகா தினம் - 2025

# அமைச்சர் மா.சுப்பிரமணியன் யோகா பயிற்சியினை செய்து, சிறப்புரை!

சென்னை, ஜூன் 22

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள் நேற்று (21.06.2025) சென்னை, அரும்பாக்கத்தில் உள்ள அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில்,11–வது சர்வதேச யோகா தினம் 2025 முன்னிட்டு யோகா பயிற்சியினை செய்து, விழா பேரூரையாற்றினார். பின்னர் அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

**11வது சர்வதேச யோகா தினம் 2025**

இன்று உலகம் முழுவதும் 11வது சர்வதேச யோகா தினம் அனுசரிக்கப்படுகிறது. அந்தவகையில் சென்னையில் உள்ள யோகா மற்றும் இயற்கை மருத்துவக்கல்லூரியில் மருத்துவ மாணவர்களோடு யோகா பயிற்சி செய்து யோகா தினம் அனுசரிக்கப்பட்டது. இன்றைக்கான கருப்பொருள் என்பது ஒரே பூமி ஒரே ஆரோக்கியம் ”Yoga for One Earth, One Health என்கின்ற பெயரில் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

யோகா செய்வதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் குறித்து அனைவரும் நன்கு அறிவார்கள். உடல்களையும், அதன் உள் உறுப்புகளையும் பலம் பெற செய்வது, நாள் முழுவதும் சுறுசுறுப்புடன் இருக்க உதவுவது, நோய் வராமல் தடுப்பது, வந்த நோயினை கட்டுப்படுத்துவது, கோபம் மற்றும் பயம் சார்ந்த உடல்நிலையை சாந்தப்படுத்துவது, உடல் தசைகளை தளர்வடைய செய்வது போன்ற பல்வேறு சிகிச்சைகளுக்கு யோகா பயிற்சி என்பது உறுதுணையாக இருந்து வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1997–ஆம் ஆண்டு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியை தொடங்கி வைத்தார்கள். இந்தியாவிலேயே சித்தா, யோகா, ஆயுர்வேதம், யுனானி, ஓமியோபதி போன்ற 5 இந்திய மருத்துவ முறைகளும் ஒரே மாநிலத்தில் இருப்பது என்பது தமிழ்நாட்டில் மட்டும்தான். இதற்கு அடித்தளமிட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்தியாவில் அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக்கல்லூரிகள் 2 சேர்த்து 19 யோகா மற்றும் இயற்கை மருத்துவக்கல்லூரிகள் தமிழ்நாட்டில் மட்டும்தான் இருக்கின்றது. இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களை விட அதிகப்படியான யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2022–ஆம் ஆண்டு ரூ.96 கோடி செலவில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் செங்கல்பட்டில் கட்டப்பட்ட சர்வதேச யோகா மற்றும் இயற்கை அறிவியல் நிறுவனத்தை தொடங்கி வைத்தார்கள் என்பது சிறப்புக்குரிய ஒன்று. முதலமைச்சர் அவர்கள் யோகா மற்றும் இயற்கை மருத்துவத்திற்கு பல்வேறு வகைகளில் முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். குறிப்பாகவும், சிறப்பாகவும் தமிழ்நாட்டில் முதலமைச்சர் அவர்களால் 44வது சர்வதேச சதுரங்கம் ஒலிம்பியாப் போட்டி மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து சதுரங்க விளையாட்டு வீரர்கள் அப்போட்டிகளில் பங்கேற்க வந்தார்கள். வந்த விளையாட்டு வீரர்களுக்கு மனஅழுத்தத்தை குறைக்கும் வகையில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ மன அழுத்த மேலாண்மை குழு ஒன்று அமைத்து அவர்களுக்கு மன அழுத்த மேலாண்மை பயிற்சி வழங்கப்பட்டது.

அதனால் யோகா இயற்கை மருத்துவ மாணவர்களுக்கு 2022–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பரிசுகளை வழங்கி யோகா துறையில் பயின்று வரும் மாணவர்களுக்கு ஒரு மிகப்பெரிய அளவில் முக்கியத்துவம் வழங்கினார்கள். அதோடு மட்டுமல்லாமல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் யோகாவிற்கான கேலோ விளையாட்டு விருதினை 2024 பிப்ரவரி திங்கள் 23 ஆம் தேதி வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்திய முறை மருத்துவர் பணியிடங்கள் பணி ஆணை மிக விரைவில் வழங்கப்படும்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இந்திய மருத்துவத்துறையில் பல்வேறு மருத்துவ கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்றைக்கு தமிழ்நாடு முழுவதிலும் அனைத்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் மாவட்ட அளவிலான மருத்துவமனைகளில் யோகா பயிற்று மையங்கள், இந்திய மருத்துவ முறைகள் போன்ற பல்வேறு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த துறைக்கு 38 மாவட்டங்களில் 100 அரசு மருத்துவமனைகளில் ரூ.7 கோடி செலவில் இயற்கை மருத்துவ நலவாழ்வு மையங்களை அமைப்பதற்கு கடந்த நிதிநிலை அறிக்கையில் ஒப்புதல் தந்து அந்த கட்டமைப்பும் மிக விரைவில் அமையவிருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றபிறகு சித்தா, யுனானி, ஆயுர்வேதா, ஓமியோபதி, யோகா போன்ற துறைகளில் உள்ள மருத்துவர் காலிப்பணியிடங்களை கடந்த ஆண்டு நிரப்பினார்கள்.

தற்போது காலியாக உள்ள சித்த மருத்துவர் பணியிடங்கள் 59, ஆயுர்வேதா மருத்துவர் பணியிடங்கள் 2, யுனானி மருத்துவர் – 1, யோகா மற்றும் இயற்கை மருத்துவர்கள் 53 ஆக 115 இந்திய மருத்துவமுறை மருத்துவர் பணியிடங்கள் வரும் 30.06.2025 அன்று முதலமைச்சர் அவர்கள் பணி ஆணையினை வழங்க இருக்கிறார்கள். இந்த பணி ஆணைகள் வழங்கப்பட்ட பிறகு இந்திய மருத்துவ துறையில் ஒரு மருத்துவர் காலிப்பணியிடம் கூட இல்லை என்கின்ற நிலை உருவாக இருக்கிறது. அதோடு 56 சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடங்களுக்கும் பணி ஆணைகள் தர இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் இந்திய மருத்துவ முறைக்கு தேவையான மருத்துவ கட்டமைப்புகளை பயன்படுத்துவதற்குரிய நிதியினை தொடர்ந்து வழங்கி உதவிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் இந்த சர்வதேச யோகா தினத்தில் மாணவர்களும், பொதுமக்களும் மகிழ்ச்சியுடன் பங்கேற்று சிறப்பித்திருக்கிறார்கள்.

சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் தொடர்பான கேள்விக்கு ஆளுநர் அவர்கள் இந்த மசோதாவிற்கு ஒப்புதல் தராமல் இருந்து சட்டமன்றத்தில் இந்த மசோதா திரும்ப பெற்றுக் கொள்ளப்பட்டது. தற்போது அது சட்டப்பூர்வமான தெளிவுரைகள் முடிக்கப்பட்டு திரும்பவும் எதிர்வரும் சட்டமன்ற கூட்டத்தொடரில் வைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே வரும் சட்டமன்ற கூட்டத்தொடரில் ஒப்புதலுக்கு அனுப்பலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குரிய கட்டமைப்புகள் அனைத்தும் முடிக்கப்பட்டு இதே வளாகத்தில் ரூ.2 கோடி செலவில் அலுவலகம் அனைத்தும் தயார் செய்யப்பட்டு உள்ளது. மாதவரம் பகுதியில் 25 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு பல்கலைக்கழகம் அமைப்பதற்குரிய இடங்கள் தேர்வு செய்யப்பட்டு தயார் நிலையில் இருக்கின்றது. அலுவலகம் போன்ற பணிகள் முடிக்கப்பட்டு தயார் நிலையில் இருக்கின்றது. சம்மந்தப்பட்ட மசோதா சட்டமன்றத்தில் நிறைவேற்றிய பிறகு, ஆளுநரின் ஒப்புதல் பெற்று சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் வந்தே தீரும் என்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அனைத்து சித்த மருத்துவமனைகளிலும் பசுமையான வகையில் மேம்படுத்திட ரூ.18 கோடி செலவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான பணிகளை இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதிதுறை ஆணையர் அவர்கள் திட்டமிட்டு முன்னுரிமை அடிப்படையில் அப்பணிகளை செய்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். மிக விரைவில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு பகுதிகளில் உள்ள சித்த மருத்துவ மையங்கள் சீர்படுத்தப்படுகிறது.

செயற்கை கருத்தரித்தல் இயற்கை மருத்துவத்தின் மூலம் செயல்படுத்தும் திட்டம் உள்ளதா? என்ற கேள்விக்கு

ஏற்கெனவே ஆங்கில மருத்துவ முறைப்படி செயற்கை கருத்தரித்தல் முறை நடைபெற்று வருகிறது. குறிப்பாக எழும்பூர் அரசு மருத்துவமனையில் செயற்கை கருத்தரித்தல் மையம் தொடங்கப்பட்டு மிகச் சிறப்பான வகையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. அண்மையில் கூட கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தொடங்கி வைத்திருக்கிறோம்.

மதுரை அரசு மருத்துவக்கல்லூரியில் அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் நானும் கூட இந்த மருத்துவமனையில் பணியாற்றும் டாக்டர் மானசூா அவர்களின் கட்டுரையினை பத்திரிக்கையில் படித்தேன். குழந்தை பேரின்மை இன்றைக்கு அதிகரித்து வரும் நிலையில் ஆங்கில மருத்துவ முறையில் செயற்கை கருத்தரித்தல் செயல்படுத்துவது போலவே இயற்கை மருத்துவ முறையின் மூலம் எப்படி செயல்படுத்தலாம் என்கின்ற கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். சித்தர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே குழந்தை பேரின்மை குறித்தான கவலை கொண்டிருக்கிறார்கள். சித்த மருத்துவம் மூலம் அந்த குறைகள் போக்கப்பட்டிருக்கிறது. எனவே பரிட்சார்ந்த ரீதியில் இதே வளாகத்தில் இயற்கை மருத்துவத்தின் மூலம் செயற்கை கருத்தரித்தல் மையம் உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலை பெற்று மிக விரைவில் செய்யப்படும்.

**எடப்பாடி பழனிச்சாமி குற்றச்சாட்டிற்கு பதில்**

எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருந்த சமயத்தில் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவராக இருந்த இன்றைய முதலமைச்சர் அவர்கள் தான் போதை பொருட்கள் நடமாட்டம் தமிழ்நாட்டில் அதிகரித்திருக்கிறது, குறிப்பாக தடைசெய்யப்பட்ட போதை பொருட்கள் அனைத்துமே தமிழ்நாட்டில் அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள், உடனடியாக அன்றைய முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் மறுத்தார்கள். அடுத்த நாளே 21 சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னையில் எங்கெயெல்லாம் கிடைக்கின்றது, தாராளமாக கிடைக்கின்ற போதை பொருட்களை சட்டமன்றத்திலே கொண்டு சென்று இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடத்தில் காட்டினோம்.

உண்மையில் போதை பொருட்களின் நடமாட்டத்தினை குறைக்கும் நல்ல எண்ணம் கொண்ட முதலமைச்சராக இருந்திருந்தால் எடப்பாடி பழனிச்சாமி என்ன செய்திருக்க வேண்டும், இது எங்கு கிடைத்தது சொல்லுங்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்கிறேன் என்று சொல்லி இருக்க வேண்டும், மாறாக சபாநாயகரை கொண்டு 21 சட்டமன்ற உறுப்பினரின் பதவியை பறிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தனர். அப்படிப்பட்ட எடப்பாடி பழனிச்சாமி இது பற்றி சொல்வது என்பது வேடிக்கையான ஒன்று. இந்த அரசுப் பொறுப்பேற்ற பிறகும் கூட ஆந்திரா மாநிலத்தில் கூட 4000 ஏக்கர் நிலப்பரப்பில் கஞ்சா பயிரிடப்படுவதை இங்கிருக்கும் காவல்துறை உயர் அலுவலர் அவர்கள் சொல்லி அதன் பிறகு ரூ.6000 கோடி மதிப்பிலான அந்த கஞ்சா பொருட்களை அழிக்கப்பட்டது.

இது தென்னிந்திய காவல்துறை உயரலுவலர்கள் மாநாட்டில் சொல்லி அது அகற்றப்பட்டது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கஞ்சா பயன்பாடு 0% என்கின்ற அளவில் ஒரு இடத்திலும் இல்லை. எங்கேயாவது இருந்து எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும். அது மட்டுமல்லாமல் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபிறகுதான் குறிப்பாக பள்ளி மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு போதை பொருட்களுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் தொடர்ந்து கின்னஸ் சாதனை படைத்து வருகிறார்கள். ஒவ்வொரு வருடமும் 70 இலட்சம் மாணவர்கள் அதற்கான விழிப்புணர்வில் பங்கேற்று சிறப்பித்து வருகிறார்கள். இப்படி விழிப்புணர்வு மூலம் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து போதை பொருட்களின் நடமாட்டத்தை அழிப்பது, சமூக விரோதிகளின் சொத்துக்களை முடக்கி அவர்கள் மேல் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருவது இந்த அரசு தான்.

கடந்த காலங்களில் பெருகி இருந்த போதை வஸ்துக்களின் நடமாட்டத்தை கட்டுக்குள் கொண்டு வந்து மிகப் பெரிய அளவிலான விழிப்புணர்வை ஏற்படுத்தி இன்றைக்கு 0% நிலை கஞ்சா பயன்பாடு இல்லை என்பதை எடப்பாடி பழனிச்சாமி நன்கு உணர வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், ஓமியோபதி துறை ஆணையர் திருமதி.எம்.விஜயலட்சுமி, இணை இயக்குநர் மரு.என்.மணவாளன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## ஒழுங்கு நடவடிக்கை ரத்து

### தலைமைக் கழக அறிவிப்பு!

வேலூர் மாவட்டம், கணியம்பாடி தெற்கு ஒன்றியம், பென்னாத்தூர் பேரூரைச் சேர்ந்த ஜி.நாகலிங்கம், கே. சரத்பாபு, ஏ.சிவராஜ், பி.கே.எஸ்.சந்தோஷ் ஆகியோர், தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

| | |
|---|---|
| **அண்ணா அறிவாலயம்** | **துரைமுருகன்** |
| சென்னை - 18, | பொதுச் செயலாளர் |
| நாள் : 21.6.2025 | தி.மு.க. |

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராம. நாராயணன்
### ஜூன் 22 (2014)



கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட காரணத்தால், கழகம் ஆட்சிப் பொறுப்பில் இல்லாத காலத்திலும், பல்வேறு எதிர்ப்புகள், நெருக்கடிகள் இருந்தபோதும், கழக கொள்கைகளை தனது திரைப்படங்கள் மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தவர்.

1989ஆம் ஆண்டு காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

தனது வாழ்நாளின் ஆரம்பம் முதல் இறுதி வரை கழகத்தின்பால் முழுஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

கிண்டி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில்

## மாணவிகள் நேரடி சேர்க்கை!

### கட்டணமில்லா பயிற்சி!

*சென்னை, ஜூன் 22-*

*கிண்டி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பெண்கள் சேர்க்கை நடைபெறுகிறது. இதில் பெண்கள் சேர்ந்து பயனடைய முதல்வர் என்.சுப்பிர மணி கேட்டுக் கொண்டுள்ளார்.*

*இது குறித்து செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-*

*அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்(மகளிர்) கிண்டியில், 2025-26ஆம் கல்வி ஆண்டிற்கான காலியிடங்களுக்கான நேரடி சேர்க்கையானது 19.06.2025 முதல் துவங்கியுள்ளது. எனவே 10 ஆம் வகுப்பு தேறியவர்கள்/ தோல்வியுற்றவர்கள்/, இடை நின்றவர்கள் மற்றும் 12ஆம் வகுப்பு தேறியவர்கள் /தோல்வியுற்றவர்கள் ஓர் ஆண்டு/இரண்டு ஆண்டு தொழிற்பிரிவுகளில் சேர்ந்து பயிற்சி பெறலாம். பயிற்சியை முடித்தவுடன் 100 சதவீத வேலைவாய்ப்பு.. பெண்களுக்கு வயது உச்ச வரம்பு இல்லை. பயிற்சியின் போது அரசால் வழங்கப்படும் சலுகைகள் விலையில்லா மிதிவண்டி, விலையில்லா பாடப்புத்தகம், விலையில்லா சீருடை 2 செட் தையல் கூலியுடன், விலையில்லா காலணி, இலவச பேருந்து மற்றும் இரயில் பயணச் சலுகை, மாதாந்திர உதவித் தொகை ரூ.750/ தகுதியுள்ள மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் உதவித்தொகை ரூ.1000/ , இலவச அடையாள அட்டை ஆகியவை அரசால் வழங்கப்படுகிறது.*

*இவ்வாறு அவர் தமது செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.*

---

மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்றச் சங்கம்

## தலைமைச் சங்க நிர்வாகிகள் பட்டியல்

### தலைமைக் கழக அறிவிப்பு!

மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287) தலைமைச் சங்க நிர்வாகிகளாக கீழ்கண்டவர்கள் தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்படுகிறது.

**தலைமைச் சங்க நிர்வாகிகள் பட்டியல்**

தலைவர் - **பிடிசி எஸ். ரவி (எ) சிவக்குமார்**

பொதுச் செயலாளர் - **த. ஆறுமுகம்**

பொருளாளர் - **எம். பெருமாள்**

மத்திய சங்கத்தின் இதர நிர்வாகிகள் மற்றும் பணிமனை வாரியாக நிர்வாகிகள் பட்டியல் தலைமைக் கழகத்தால் பின்னர் அறிவிக்கப்படும்.

| | |
|---|---|
| **அண்ணா அறிவாலயம்** | **தலைமைக் கழகம்** |
| சென்னை - 18, | தி.மு.க. |
| நாள் : 21.6.2025 | |

---





# தி.மு.க.
# இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ.யுவராஜ் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 23.06.2025 | வாலாஜாபாத் வடக்கு ஒன்றியம் | ஏனாத்தூர் ஊராட்சி, செட்டியார்பேட்டை | ஒப்பிலா மணி மீனாட்சிசுந்தரம் |
| 2 | | காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியம் | கிளார் | ஒப்பிலா மணி மீனாட்சிசுந்தரம் |
| 3 | | காஞ்சிபுரம் மாநகரம் பகுதி 4 | 11–வது வட்டம் | ஒப்பிலா மணி மீனாட்சிசுந்தரம் |
| 4 | 24.06.2025 | கருங்குழி பேரூர் | மேலவலம்பேட்டை | போடி காமராஜ் எஸ்.கே.ஸ்ரீராம் |
| 5 | | மதுராந்தகம் வடக்கு ஒன்றியம் | நெல்வாய் கூட்ரோடு | போடி காமராஜ் எஸ்.கே.ஸ்ரீராம் |
| 6 | | மதுராந்தகம் தெற்கு ஒன்றியம் | முன்னூத்திகுப்பம் | போடி காமராஜ் எஸ்.கே.ஸ்ரீராம் |
| 7 | 25.06.2025 | உத்திரமேரூர் பேரூர் | பேரறிஞர் அண்ணா சிலை அருகில் | எம்.எல்.நாதன் வழக்கறிஞர் யாசர் |
| 8 | | உத்திரமேரூர் ஒன்றியம் | பட்டாங்குளம், தளவராம்பூண்டி ஊராட்சி | எம்.எல்.நாதன் வழக்கறிஞர் யாசர் |
| 9 | | காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியம் | மாகறல் ஊராட்சி | எம்.எல்.நாதன் வழக்கறிஞர் யாசர் |
| 10 | | அச்சிறுப்பாக்கம் பேரூர் | காந்தி நகர் 12–வது வட்டம் | பவானி கண்ணன் ச.பேரரசன் |
| 11 | | அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் | மின்னல் சித்தாமூர் | பவானி கண்ணன் ச.பேரரசன் |
| 12 | | அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம் | ஊனமலை | பவானி கண்ணன் ச.பேரரசன் |
| 13 | 26.06.2025 | சித்தாமூர் மேற்கு ஒன்றியம் | நெற்குணம் | ஆரூர் மணிவண்ணன் விஷார் தமிழரசன் |
| 14 | | சித்தாமூர் கிழக்கு ஒன்றியம் | அமந்தங்கரனை ஊராட்சி | ஆரூர் மணிவண்ணன் விஷார் தமிழரசன் |
| 15 | | திருக்கழுக்குன்றம் தெற்கு ஒன்றியம் | வாயலூர் | ஆரூர் மணிவண்ணன் விஷார் தமிழரசன் |
| 16 | 27.06.2025 | இடைக்கழிநாடு பேரூர் | கடப்பாக்கம் | நாத்திகம் நாகராஜன் தே.சிலம்பரசன் |
| 17 | | இடைக்கழிநாடு பேரூர் | நெல்லூர் | நாத்திகம் நாகராஜன் தே.சிலம்பரசன் |
| 18 | 28.06.2025 | மதுராந்தகம் நகரம் | தேரடி தெரு | திருப்பூர் ரஜினி செந்தில் ச.பேரரசன் |
| 19 | | இலத்தூர் வடக்கு ஒன்றியம் | கல்குளம் | திருப்பூர் ரஜினி செந்தில் ச.பேரரசன் |
| 20 | | இலத்தூர் தெற்கு ஒன்றியம் | சீக்கினாங்குப்பம் | திருப்பூர் ரஜினி செந்தில் ச.பேரரசன் |
| 21 | 29.06.2025 | காஞ்சிபுரம் மாநகரம் பகுதி 1 | வட்டம் 1 | சேலம் சுஜாதா தாவூத் மா.பூபதி |
| 22 | | காஞ்சிபுரம் மாநகரம் பகுதி 2 | வட்டம் 22 | சேலம் சுஜாதா தாவூத் மா.பூபதி |
| 23 | | காஞ்சிபுரம் மாநகரம் பகுதி 3 | வட்டம் 51 | சேலம் சுஜாதா தாவூத் மா.பூபதி |
| 24 | 30.06.2025 | சாலவாக்கம் ஒன்றியம் | அரும்புளியூர் ஊராட்சி, மாம்பாக்கம் | குமரி பிரபாகரன் தே.சிலம்பரசன் |
| 25 | | வாலாஜாபாத் தெற்கு ஒன்றியம் | தென்னேரி ஊராட்சி | குமரி பிரபாகரன் தே.சிலம்பரசன் |
| 26 | | வாலாஜாபாத் பேரூர் | நேரு நகர் 11–வது வட்டம் | குமரி பிரபாகரன் தே.சிலம்பரசன் |

**காஞ்சிபுரம்**

நாள் : 21.06.2025

கலைஞர் 100 1924 - 2023

